உ
சிவமயம்



# "இரத்தின மலர்"

இது ஒரு நினைவு வெளியீடு

28-05-1998

921
அபச
SL/PR

உ
சிவமயம்

# "இரத்தின மலர்"



எனக்கு வேண்டும் வரங்களை
யிசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல்
மதியிலிருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திட நீசெயல் வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவய
திவையுந் தரநீ கடவாயே.

**யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு**
பிரபல வர்த்தகர்

## திரு. வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்

அவர்கள்தம் அருமைப் பாரியார்

## திருமதி அரசரத்தின அம்மாள்

அவர்கள்தம் சிவசாரூப்பியப் பேற்றினைக்
குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

**28-05-1998**

உ
சிவமயம்



# காணிக்கை

யாழ் – தொண்டைமானாறைப் பிறப்பிடமாகக் கொண்டு கடந்த 28-04-1998 செவ்வாய்க்கிழமை சிவசாருப்பியப் பேற்றினைக் கொழும்பில் பெற்றுக் கொண்ட **திருமதி இ. அராசரத்தின அம்மாள்** அவர்கள் தம் நினைவாக வெளியிடப்படும் "**இரத்தின மலர்**" எனும் இந்நினைவு மலர் அன்னார் தம் ஆத்மா இறையடிகளில் நித்திய ஆத்ம சாந்தி பெறவேண்டும் என நாமெல்லோரும் கண்ணீரோடு இறைவனைப் பிரார்த்தித்து அமரர் தம் பாதங்களுக்கே காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
**கணவர் – வீ. இராசகேரம்**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்**

இல. 25, 27 வது ஒழுங்கை,
கொள்ளுப்பிட்டி.
கொழும்பு – 03.
தொலைபேசி: 577910

271, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி: 434800



# அமரர் திருமதி இ. அரசரத்தின அம்மாள் அவர்கள்

**வையத்துள்:**
**02-04-1912**

**வானுலகுள்:**
**28-04-1998**

## திதி நவிலும் வெண்பா

தீதிலாத வெகுதானிய வருடத்துச் சித்திரைத் திங்கள்
மேதினியில் பூர்வபக்கத் துதியையாம் – வேதியர்கோன்
சிவனவனாம் தாள் சேர்ந்தாள் அரசரத்தின அம்மாள்
தவமிகு திதியிதுவெனக் கொண்டே.

தொண்டைமானாற்றுப் பெருவணிகர் இராசசேகர வள்ளல்
கொண்ட அருந்துணைவி அரசரத்தின அம்மாளவள்
விண்ணடைந்தாள் வேதியரும் விரும்பி அழைத்திடவே
மண்ணகத்து வாழ்வினிப் போதும் போதுமென்றே.

*ஆக்கம்: அருட்கவி வேலணை வேணியன்*

திதி: ஒவ்வொரு வருடமும் வரும் சித்திரை மாதத்துப் பூர்வபக்கத் துதியை திதி எனக் கொள்ளவும்.

உ
சிவமயம்

# நிறைவாழ்வு கண்ட மங்கையிவள்!

ஊர்ச்சிறப்பு:-

அன்னதானக் கந்தனவன் அருட்பெருங் கருணை கொண்ட வள்ளலவன், அள்ள அள்ளக் குறையாத அமுதெனவே தன்னருள் அள்ளி அள்ளி வாரி வழங்கும் செல்வக்குமரன் தொண்டைமானாறு செல்வச்சந்நிதிப் பெரும் பதியுறைந்து அருள்மழை இன்றும் பொழிந்து கொண்டி ருக்கும் முருகன் அன்றோ! ஐயன் கந்தன் அமர்ந்துள்ள பெரும்பதியும் தொண்டைமானாறுக் கிராமம் என்றால் என்னே இவ்வூர்ச் சிறப்பு. யாழ்நகரை அண்மித்துள்ளதே இவ் அற்புதக் கிராமம். அறிஞர் பெருமக்களை, அரசியல் தலைவர்களை, தெள்ளமுதத் தமிழ் காக்கும் வீரதீர மக்களையும் தியாகிகளையும், அன்றாட தொழில் செய்து மகிழ்வுடனே வாழும் மக்களையும் தன்னகத்தே கொண்ட சிறப்புமிகு கிராமம் தொண்டை மானாறு என்று கூறினால் அது புகழாரமல்ல. முற்றும் முழுதும் உண்மை. தொண்டைமானாற்றங் கரையினிலே உள்ள செல்வச் சந்நிதிப்பதியுறைந்தருளும் முருகன் நிறையாசிகள் பலபெற்ற ஊர் இதுவன்றோ! புதுமைகள் பலகொண்ட பூமியிதுவன்றோ! இங்குதான் இலங்கையில் கப்பலோட்டிய தமிழனாம் அமரர் ஸ்ரீமான் சின்னத்தம்பி வீரகத்திப்பிள்ளையும் பிறந்திட்டார் என்பதும் சரித்திரம். அனைத்தும் முருகன் திருவருள்.

அமரர் பிறப்பு:-

இவ்வாறு பெருமை பல தன்னகத்தே கொண்ட தொண்டைமானாற்றுப் பதிதனிலே உதித்தவர்தான் அமரர் திருமதி அரசரத்தின அம்மாள் அவர்களுமாவர். இவர்தம் தந்தையார் திருகோணமலை அமரர் திரு. தம்பு அவர்கள்.

தாயார் தொண்டைமானாறு திருமதி மாணிக்கம் தம்பு அவர்கள். அமரர் தாம் இவர்களின் சிரேஷ்ட புதல்வி யாராவார். இவர் தம்மை அடுத்துப் பிறந்தவர்கள் இரு சகோதரர்கள். ஒருவர் திரு. இரத்தினலிங்கம். இவர்தம் துணைவியார் திருமதி பத்மாவதி. அடுத்த சகோதரர் அமரர் திரு. இராசலிங்கம்.

திருமணம்:-

சீரும் சிறப்புடனும் வாழ்ந்த அம்மையார்தாம் நிறைந்த இறைபக்தி கொண்டு செல்வச்சந்நிதி முருகப்பெருமானை தளராத நம்பிக்கைகொண்டு வணங்கி வந்த பெருமைக் குரியவர். திருமணப் பருவம் வந்ததும் பெரியோர் விருப்புக்கும் இறையாசிகளைக் கொண்டும் அமரர்தம் திருமணம் நடைபெற்றது.

இல்லற ஆரம்பம்:-

அமரர் அவர்கள்தம் இல்லறத் தலைவனாகக் கிடைத் தவர் அமரர்கள் வீரகத்திப்பிள்ளை - வள்ளியம்மை ஆகியோர் தம் கனிஷ்ட புதல்வர் திரு. இராசசேகரம் அவர்கள். இவர் யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகரும் ஓர் சமாதான நீதிவானுமாவார். வீரகத்திப்பிள்ளை அன்ட் சன்ஸ், சேகரம் அன்ட் சன்ஸ் உரிமையாளருமாவார். இவர்கள் திருமணம் 1933ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்றது. இதைத் தெய்வ அருள்நிறை திருமணம் எனக் கூறலாம். காரணம் ஏலவே சிவயோக சுவாமிகள் நல்வாக்கையும், தெல்லிப்பழை முத்துரிஷி சுவாமிகள் நேரடி ஆசிகளும் பொலிந்த திருமணம்.

புகுந்தவிடச் சிறப்பு:-

அமரர் தம் கணவர் திரு. இராசசேகர்ம் அவர்கள் ஓர் சிறந்த நேர்மையான தொழிலதிபர். இவர் தமக்கு நேரே மூத்த சகோதரர்கள், சகோதரிகள் எண்மர். அமரர் சுப்பையா (சமாதான நீதிவான்) இவர்தம் துணைவியார் அமரர் திருமதி அன்னப்பிள்ளை, அமரர் திருமதி செல்லமுத்து துணைவர்



அமரர் திரு. மயில்வாகனம், அமரர் வைத்தியகலாநிதி துரைசாமி இவர்தம் துணைவிமார் அமரர்கள் வள்ளியம்மாள் - திரவியம், அமரர் திருமதி முத்தாச்சி கணவர் அமரர் இளையதம்பி, அமரர் இராசரத்தினம் துணைவியார் அமரர் லெட்சுமிப்பிள்ளை, அமரர் வண. பிதா தார்சீயஸ் (இரத்தினராசா), கடைசி இரு சகோதரிகள் அமரர்கள் தங்கரத்தினம், நவமணி ஆவர். இவ்வாறு பரந்த ஒரு பெருங்கொடியில் பிறந்த கனிஷ்ட புதல்வர்தான் அமரர்தம் துணைவர் திரு. இராசசேகரம் அவர்கள். புகுந்த இடத்துச் சிறப்புத் தனக்குக் கிடைத்தற்கரிய பேறெனக் கருதி இல் வாழ்க்கை நடாத்தி வந்தவர்தான் அமரர் அம்மையாரவர்கள்.

இல்லற வாழ்க்கைச் சிறப்பு:-

புகுந்தவிடத்தில் மைத்துனர்கள் அனைவரும் ஒவ்வொரு வகையில் சிறந்து விளங்கியவர்கள். அவ்வாறே அமரர் தம் கணவர் தாமும் என்றால் மிகையல்ல. அமரர்தம் கணவர் இராசசேகரம் அவர்கள் தம்மை ஒரு தொழிலதிபர் என்று மட்டும் கூறாது ஒரு சிறந்த சாதனையாளர் எனவும் கூறலாம். இவரது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட **வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின்** போஷகராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்குகின்றார். ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகளின் நிறையாசிகளை நிரம்பப் பெற்றதினாலேயே திறம்பட நலம்பெற வாழ்ந்து அமரர் தம்முடன் சிறந்த இல்லற வாழ்வு வாழ்ந்து இன்றும் தனது 91வது வயதினிலும் சிந்தனை குன்றாத தளராத உள்ளங் கொண்டவராகத் திகழ்கின்றார். இறை நம்பிக்கையுடன் இனப்பற்றுடைய ஒழுக்கசீலராகவும் சிறந்த புலாலுண்ணாச் சைவராகவும் விளங்குகின்றார். இன்று இல்லாளின் பிரிவால் ஆறாத் துயரில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளோடு துவண்டு நிற்கின்றார். தன் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும், தொழிற்சிறப்புக்கும் உயர்ச்சிக்கும் துணை நின்றவர் தம் துணைவியார் என்பதை இன்று மனச்சோர்வோடு கூறுகிறார். தனது 18 வயதில்

1926ம் ஆண்டு சிவயோக சுவாமிகளின் முதல் ஆசிகள் கிடைத்ததாகக் கூறுகின்றார். அதே நேரத்தில் 1933ல் ஆரம்பித்த இல்லற வாழ்க்கையிலும் சுவாமிஜிகளின் நிறையாசிகள் தனக்குக் கொழும்புத் துறையில் சுவாமிஜி யின் ஆச்சிரமத்தில் கிடைத்ததாகவும் இராசசேகரம் ஐயா அவர்கள் கூறுகிறார். 1936ம் ஆண்டளவில் தங்கள் இருவரையும் சுவாமி கொழும்புத்துறையில் சந்தித்தபோது உங்களுக்கு ஒரு மகன் பிறப்பான். அவனுக்கு **"வடிவேற் கரசன்"** எனும் பெயரைச் சூட்டவும் எனக்கூறியிருக்கிறார். அத்தோடு தன்னை யோக நிலைக்குப் பயிற்சி செய்யும் வண்ணம் பணித்து **"சும்மா இருந்தால் சோறாமோ, வாடா சித்த காலாட்ட"** எனவும் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி னாராம். இப்படியாக அம்மையாருடன்தான் நடாத்திய இறைபக்தி நிரம்பிய தெய்வ ஆசிகள் நிரம்பிய திருமண வாழ்வில் சுவாமிகளின் அருள்வாக்கின்படி மக்கட் செல்வமும் பெற்றதாக திரு. இராசசேகரம் அவர்கள் கூறினார். பலதுறை சார்ந்தோரின் நட்பிலும் பார்க்கத் தான் மறக்க முடியாத தொடர்பு சுவாமிகளுடன் வைத்திருந்த தெய்வத் தொடர்பெனவும் கூறுகிறார்.

மக்கட் சிறப்பு:-

1937 ம் ஆண்டு தலைமகன் சுவாமிகளின் வாக்கின்படி உதித்தார். இவர்தாம் திரு. வடிவேற்கரசன் இவர்தம் துணைவியார் திருமதி பத்மினி வடிவேற்கரசன். இவர்கள்தம் வழியில் அமரர்தாம் கண்ட பேரக்குழந்தைகள் மூவர். செல்வன் திபாகரன், செல்வி திபாகரி, செல்வி தயாகரி ஆவர்.

அடுத்த மகளார் திருமதி சங்கநிதி, திரு. நடேசன் அவர்தம் துணைவராவர். இவர்கள்தம் வழியில் அம்மையார் கண்ட பேரப்பிள்ளைகள் மூவர். திருமதி லோகினி இவர்தம் துணைவர் திரு. பாலச்சந்திரன். இவர்கள் தம்பால் அமரர் கண்ட பூட்டப்பிள்ளைகள் மூவர் செல்வர்கள் சங்கர், விமல், கிருஷ்ணா.



அடுத்த பேத்தியார் திருமதி குமுதினி, இவர்தம் துணைவர் அருணேஷ் நேசரட்ணம் இவர்கள் தம்மால் அமரர் கண்ட ஒரே பூட்டப்பிள்ளை செல்வன் அகிலன்.

அடுத்த பேரன் திரு. வரதீசன், இவர்தம் துணைவியார் திருமதி மாலினி.

மூன்றாவது மகனார் திரு. ஸ்ரீ பத்மநாபன் (பேபி). இவர்தம் துணைவியார் திருமதி பரிமளா. இவர்கள்பால் அமரர் கண்ட பேரக்குழந்தைகள் மூவர். செல்வன் ஸ்ரீகுமரன், செல்வன் ஸ்ரீபரன், செல்வி ஸ்ரீபரி.

நான்காவது மகளார் திருமதி கனகேஸ்வரி, இவர்தம் இல்லத் தலைவன் திரு. விவேகானந்தன். இவர்களால் அமரர் கண்ட பேரக்குழந்தைகள் இருவர். செல்வன் யோகதுரை, செல்வி ரேணுகா.

ஐந்தாவது மகளார் திருமதி பயோதரி, கணவர் திரு. ஞானசிங்கம். இவர்களால் அமரர்தாம் கண்ட பேரப்பிள்ளை திருமதி கல்பனா. இவர்தம் துணைவர் திரு. அரவிந்தன். இவர்கள் தம்பால் அமரர் கண்ட ஒரே பூட்டி செல்வி அஞ்சலி.

ஆறாவது மகளார் திருமதி வத்சலாராணி. இவர்தம் துணைவர் திரு. சிவகுருநாதன். செல்வன் வாசன், செல்வி காஞ்சனா, செல்வி ராஞ்சனா. இவ்வழியில் அமரர்தாம் கண்ட பேரப்பிள்ளைகள் மூவர்.

ஏழாவது மகனார் திரு. தொண்டமாநாபன், இவர்தம் துணைவியார் திருமதி ரஞ்சினி. இவர்களால் அமரர் கண்ட பேரர்கள் செல்வன் திவாகர், செல்வன் ஜெய்கர் என இருவர்.

கடைக்குட்டி மகளார் திருமதி கேமந்தராணி. இவர்தம் துணைவர் திரு. தியாகலிங்கம். இவர்களால் அமரர் அடைந்த பேரப்பிள்ளைகள் மூவர் செல்விகள் ஜெயந்தினி, தர்மினி, விஜயதர்சினி ஆகியோர்.

அமரர்தம் பண்புகள்:-

அமரர்தாம் வாழும் காலத்தே தாம் கரம்பற்றிய கணவ

னைத் தெய்வமாக மதித்து மேலும் அரசனுக்குரிய மந்திரி போலவும் செயற்பட்டு வந்தார். நல்ல மக்களையும் கண்டார்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட்பேறு. - குறள்

மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.

நற்பண்புடன் வாழ்க்கையை நடாத்தி நல்ல மக்கட் செல்வங்களையும் சிறப்புறவே வாழக் கண்டவர். இன்னும் மேலாகச் சிறந்த நல்ல தகுதியுடைய மருமக்கள், பேரப்பிள் ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்று கண்டு மகிழ்வுற்றி ருந்தார். இவ்வகையில் வாழ்க்கையில் இவர் கொடுத்து வைத்த பாக்கியசாலி.

வாழும் காலத்தே ஆலய தரிசனம் கோடி புண்ணியம் என வாழ்ந்தவர். தமிழகத்தில் பல பாடல்பெற்ற தலங்களையும் அவ்வாறே இலங்கையிலும் தரிசித்த பாக்கியம் இவர்தன் தர்ம வழிகளில் கண்ட பெரும்பேறெனலாம். 1958ல் மலேஷியா போன்ற நாடுகளுக்கும் சென்று வந்தார்.

ஈற்றில் 26-04-1998 அன்று அம்மையார் பூவோடும் பொட்டோடும். இறைசேவைக்கு அழைக்கப்பட்டுவிட்டார். என்னே மனித வாழ்வு? நாம் வாழும் காலத்தே சிறந்த தான தர்மங்களைச் செய்து இறையருளாசிகளைப் பெற அம்மை யார் வழியில் நிலைநிற்கப் பழகிக் கொள்ளுதல் நலம்.

நிறைந்த மனம் படைத்த உயர்ந்த நோக்குடைய அம்மையார் தம் புனிதம் மிக்க ஆத்ம இறை திருவடிகளில் எல்லாம் வல்ல செல்லச் சந்நிதிப் பெருமான் திருவருளால் நித்தியசாந்தி பெற்றுய்யக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி உணர்ந்து பிரார்த்திப்போமாக. **நிறைவாழ்வு கண்ட மங்கையிவள்** நாமம் என்றென்றும் வாழ்கவெனப் போற்றி வாழ்த்துவோமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

***- ஓர் தீவக அன்பன்***





# எல்லாம் அவன் செயலே!

எனது வாழ்க்கையில் யான் பெற்ற பெரும்பேறு என்னைப் பெற்ற பெற்றோர்கள். அடுத்து என் உடன் பிறந்தோர் துணை. இளம் பிராயாத்திலிருந்து எங்கள் குருபரன் சிவயோக சுவாமிகள் தம் அருளாசிகளைப் பெற்றபேறு. அதேநேரத்தில் சுவாமிஜிகளின் நல்லாசிக ளுடன் யான்பெற்ற இன்பம் இல்லத்துணை. இல்லற வாழ்வில் யான் என் தொழில் வளத்தைப் பெருக்கவும், என் சமூக சேவைகளில் முன்னிற்கவும் உறுதுணையாக நின்றவள் எனது மனைவி **அமரர் அரசரத்தின அம்மாள்** என்றால் அது உண்மையை உளநெகிழ்வுக்குள் மத்தியில் கூறுவதாகும். எனக்கு உவந்த இல்லத்துணை கிடைத்தி ருக்காவிடில் இன்றைய இந்த வயதுவரை யான் வாழ்ந் திருக்க முடியாது. அத்தோடும் என் தொழில் வளத்தையும் பெருக்கி இருக்க முடியாது. இன்று என் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பிறர் மதிக்கச் சிறப்புடன் வாழ்கிறார்கள் என்றால் அது தனிய என் திறமையன்று என்மனைவியின் பங்களிப்பும் நிறைய உண்டு. பல்வேறு சந்தர்ப்பங்களில் யான் சிவயோக சுவாமிகள் நல்லாசிகளைத் தெய்வ அருளாசிகளென மதித்துப் பெற்றிருக்கின்றேன். இதனை அடக்கமாகப் பெரும்பேறாகக் கருதியான் கூறவேண்டும். அவ்வகையில் தான் எனக்கு மனையாளும் வந்தமைந்தாள்.

எமது திருமணத்தை என் தந்தையார் 1933ம் ஆண்டு மிக அடக்கமாகச் சிறப்பாகச் செய்து வைத்தார். அந்தச் சுபநேரத்தில் தெல்லிப்பழை சுவாமி முத்துரிஷி அவர்கள் எதிர்பாராதவிதமாக வந்து எம்மை ஆசீர்வதித்தார். எமது திருமணத்தை நடாத்தி வைத்த எனது தந்தையும் எம்மை விட்டு ஒருமாத காலத்தில் பிரிந்துவிட்டார். என்னே இறைவன் சோதனை? எனது தந்தையார் அமரர் திரு. சி. வீரகத்திப்பிள்ளை அவர்கட்கு சொந்தத்தில் 19ம் நூற்றாண்ட

ளவிலேயே "சிவசுப்பிரமணிய புரவி" எனும் பாரிய சரக்குக் கப்பலும் மற்றும் இன்னும் 5 கப்பல்களும் இருந்தன. "கோக்க நாடா, வள்ளிநாயகி, பேரானந்தவல்லி, ஆதிபூரணி, தெய்வ நாயகி" இவை அனைத்தும் இந்தியா, பர்மா, இறங்கூன், அரிக்கன், மோல்மீன் எனும் துறைமுகங்களிலிருந்து நெல், அரிசி, தவிடு, தேக்குமரம், சட்டாப்பாய் என்பவற்றை வடமா காணத் துறைமுகங்களுக்கு இறக்குமதி செய்யத் துணை புரிந்தன. இந்தியாவுக்கு "தெய்வநாயகி" எனும் சிறிய கப்பலே பாவிக்கப்பட்டு வந்தது. இதிலே ஓடும், மலையாளப் புகையிலையும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. இது தற்புகழ்ச்சியல்ல உண்மை.

இவ்வாறாக எமது குடும்பச் சூழ்நிலைக்கு உவந்தவளாக என் மனைவி வந்தடைந்தார். இந்த நிகழ்ச்சி அவருக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்தது. எமக்கும் பிற்காலத்தில் நல்ல மக்கட் செல்வங்களைப் பெற்றெடுத்ததால் பெருமை யைத் தேடித் தந்ததெனலாம்.

எனது மனைவி பிரிவதற்கு முதல்நாள் இரவு சுவாமி ஒருவர் ஒரு வெண்சங்கை எனது கரங்களில் தந்து மீளப் பெற்றதும் பிரிவினன்று எனது தொண்டையில் உணவு சிக்கியதும் யான் அடைந்த சோகத்திற்குரிய ஏலவே அடைந்த அறிகுறிகள்.

எனது ஆழ்ந்த துயரின் மத்தியில் அவள் தன் ஆத்மா இறையடியில் நித்திய சாந்திபெற எல்லாம்வல்ல பெருமானை எல்லாம் அவன் செயலே எனக் கூறிப் பிரார்த்திக்கின்றேன்.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயர்வான்
கோனுயரக் கோலுயரும்"

இவ்வாறாக ஔவைப் பிராட்டியார் வழியில் என்னை உயரவைத்த என் இல்லத்தரசியின் பிரிவு ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

அன்பகலாத கணவன்

**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**





# வாயார வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!

எமது இல்லங்களின் ஒளிவிளக்காகவும், எமது உள்ளங்களில் கோயில் கொண்ட தெய்வமாகவும் விளங்கி அம்மா! மாமி! பாட்டி! பூட்டி என நாம் அன்பு சொரிந்து அழைத்த வாய்களால் இனி யாரை நாம் ஆசையோடு அவ்வாறு பாசத்தோடு அழைப்போம் எனும் ஆறாத் துயரில் ஆழ்ந்து இன்னும் மீளாத்துயரில் அமிழ்ந்துபோய் இருக்கிறோம்.

எமது இளமைக்கால அனுபவங்களை ஒருகணம் இரைமீட்டுப் பார்க்கிறோம். மகனே, மகளே என்றெல் லோரையும் ஒவ்வொருவிதமாக முறைசொல்லி ஆர்வமாய் அழைத்து அன்புசொரிந்து மகிழ்ந்த கரங்களெங்கே எனத் தேடுகிறோம். தேடி இனி என்ன பலன். காலன் உங்கள் உயிரைக் கவர்ந்து கொண்டான். கொடியவன் கூற்றுவன்! கொடுந் தீயில் தங்கள் தங்கமேனி பிடிசாம்பல் ஆனது. அதுவும் இன்று சமுத்திர நீரில் சங்கமமாகியது.

பெயர் பூத்து விளங்கிய குடும்பத்தில் நீங்கள் வந்து புகுந்து எமையெலாம் ஈன்றெடுத்து இன்று இறையன் பைத்தேடிச் சென்று விட்டீர்களே. பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றீர்கள். என்னே மனித வாழ்வு? வாழும் காலத்தே புனித வாழ்வு வாழ்ந்து நிறை வாழ்வு கண்டு, நிறை செல்வத்தை அனுபவித்து அதில் திருப்தி காணாது நிலையான மோட்ச இன்பப் பேறுதான் இறைநியதியின்படி மனித வாழ்வில் ஈற்றில் பெறும்பேறெனக் கருதி அதை நாடிக்கொண்டீர்கள். யோகிகள் பலரின் ஆசிகளைப் பெற்று இன்று இறை ஆசிகளைப் பெற்று அவன் திருவடிகளில் சாந்தி சமாதானத்துடன் வீற்றிருக்கிறீர்கள். நாமும் தங்கள்

ஆத்மா இறைவன் திருவடிகளில் நித்திய ஆத்ம சாந்தி நிலைபெறவேண்டும் எனக் கண்ணீரோடு இறைவனை நோக்கி பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வாழ்க வளமுடன் இறைதிருவடிகளில் என வாயார வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!

இங்ஙனம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு
இருப்பாரென்று எண்ணவோ திடமில்லையே
அன்றுவரும் அந்தகர்க் காளாகவோ
வாடித்திரிந்து யான்
கற்றதும் கேட்டதும்
அவலமாய் போதல் நன்றோ
கனியேனும் வறிய செங்காயேனும்
உதிர் சருகு கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி அள்ளிப்புசித்து
யான் கண்மூடி
மௌனியாய் இருப்பதற்கெண்ணினேன்
எண்ணமிது சுவாமி நீர் அறியாததோ
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.



# கடல்கடந்து வந்த இரங்கல் செய்தி!

கிட்டத்தட்ட அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நான் மலாயா நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தேன். புதிய வாழ்க்கையைப் பழகும் வரைக்கும்; இடமும், மக்களும் நடைமுறைகளும், புதுமையாகத் தெரிந்தன. எனது பெற்றோர்களையும் சகோதரர்களையும் பிரிந்திருந்த மையால் தனிமையாகக்கப்பட்டேன். உயர் கல்வியை கற்பதற்காகவே நான் அவ்வாறு வந்தேன்.

எனது மாமா இராஜசேகரம் எனக்கு பாதுகாவலராக இருந்தார். அவரது திருமணத்தைத் தொடர்ந்து காலம் சென்ற அரசரத்தின அம்மாள் எனக்குத் தாயாகக் கிடைக்கப்பெற்றார். இன்னொருவரை இவரைவிட நான் சிறந்ததாகப் பெற்றிருக்க முடியாது. எனது பெற்றோரைக் காட்டினும் இவரை நான் சிறப்பாக அறிந்திருந்தேன். அவர் எப்பொழுதும் - எவ்வகையிலும் என்மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். நான் இலங்கைக்கு வெளியே சென்றிருந்த பொழுதும் கூட அந்த அன்பு நீடித்தது.

கொழும்பில் எனது படிப்பைத் தொடருவதற்காக 1934ம் ஆண்டே யாழ்ப்பாணத்தை விட்டகன்றேன். பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்து கொண்டேன். ஆயின், அமரர் அரசரத்தின அம்மாளுடனான உறவை எப்பொழுதுமே பேணி வந்திருக்கிறேன். யாழ்ப்பாணத்திற்கு நான் எப்பொழுதாவது போவதாக இருந்தால் அது அவரையும் அவரது குடும்பத்தினரையும் காண்பதற்காகவேயாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்த சுமுகமற்ற சூழ்நிலைகளால் அவர் கொழும்பில் வந்து தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. நான் கடைசியாக 1992ம் ஆண்டு அவரை குறுகிய காலம் கண்டேன்.

எமது இளைய மகன் அருணேஷ் குமுதினியை திருமணம் செய்ததன் மூலம் எமது குடும்பங்கள் இரண்டும் மிகவும் நெருக்கமாகிக் கொண்டு அளவற்ற மகிழ்ச்சியை அனுபவிக்க வழிவகுத்தது.


அமரர் அரசரத்தின அம்மாளின் பிரிவு எமக்கு ஆழமான துன்பத்தைத் தருகிறது. அவரது இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்கு லண்டனில் இருந்து நேரகாலத்துடன் வந்துசேர முடியவில்லை. அருணேஷ், குமுதினி அவர்களின் மகன் அகிலன் ஆகியோரும் நானும் அமரர் அரசரத்தின அம்மாளின் நினைவாக எமது அஞ்சலிகளைத் தெரிவித்து, அந்தியேட்டி கிரியைகளிலும் பங்குகொண்டு, அன்னாரின் ஆன்மா இறைவனின் திருவடியில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**அருணாசலம் நேசரத்தினம்**
(இலங்கைக்கான லண்டன் தூதரகத்தின்
முன்னாள் 1வது செயலாளர்)
லண்டன்
ஐக்கிய இராச்சியம்

கொழும்பு
29-05-1998



உ
ஓம் சரவணபவ



## திருப்புகழ்

நீலங் கொள் மேகத்தின் மயில்மீதே
நீ வந்த வாழ்வைக் கண்டதனாலே
மால் கொண்ட பேதைக்குன் மண(ம்)நாறும்
மார் தங்கு தாரைத் தந்தருள்வாயே
வேல் கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங் கொள் சூரர்க்குன் உலகாலா
நால் அந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார் தட்டும் பெருமானே.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

# கோளறு பதிகம்

வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடுவடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4



நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவான்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந் தென்
உளமே புகுந்தி வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிச்செய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர் மிசை யோனுமாலும் மறையோடுதேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே ! 11





# திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன் றறியேனே.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறு மாறே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு
இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே.

# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாகசம் என்னுந் தேன்.

நமச்சிவாய வா ஆழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன நேகன் இறைவ னடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி



ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்ய விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

**ஆக்கம்** அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனார் ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்



நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந் தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*(பதிகம் முற்றிற்று)*

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யாகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருத்தொண்டர் புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபோர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.

உ
சிவமயம்
ஓம் சரவணபவ!



# கந்தர் சஷ்டி கவசங்கள்

## இரண்டாவது கவசம்
## திருச்செந்தூர் வேலன்

**காப்பு**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க



அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்

பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை வருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்



மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

# திருப்புகழ்

அறுகு நுனி பனியனைய சிறியதுளி
பெருகியொரு ஆகமாகியோர் பாலரூபமாய்
அருமதலை தனிலுருகி ஆயிதாதையார்
மாய மோகமாய் அருமையினில்
அருமையிட மொள மொளென உடல்
வளர மாயமோகமாய் பாலரூபமாய் அவரொரு பெரியோராய்

அழகு பெற நடையுடைய கிறிதுபட
மொழி பழகி ஆவியாயதோர்
தேவி மாருமாய் விழுசுவரை
அரிவையர்கள் படுகுழிழை நிலைமையென
வீடுவாசலாய் மாட கூடமாய்
அணுவளவும் தவிடு மிக பிதிரவிட
மனமிறுகி ஆசையாளராய் ஊசி
வாசியாய் – அவியுறு சுடர்போல

வெறுமிடியன் ஒரு தவசி அமுது படை
எனும் அளவில் மேலை வீடுகேள்
கீழை வீடுகேள் திடுதிடென நுழை
வதன் முன் எதிர் முடுகி அவர்களோடு
கீறி ஞாழல் போல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வரு பொருள்கள் சுவறியிட
மொழியுமொரு வீணியார் சொலேமேல
தாய்யிட விதிதனை நினையாதே.

மினுகு மினுகெனு முடலம் மறமுறுகி
நெகிழ்வுறவும் வீணியார் சொலே
மேலதாயிடா மறுமையுள தெனுமவரை
விடும் விழலை அதனில் வருவார்கள்
போகுவார் கானுமோவென விடுதுறவு
பெரியவரை மறையவரை வெடுவெடென
ஏளமே சொலாய் ஆளீ வாயாராய்
இடையுறு வருநாளில்



வறுமைகளும் முடுகிவர உறுபொருளாம்
நளுவ சில வாத மூது காமாளை
சோகை நோய் பெரு வயிறு
வயிறு வலி படுவன் வர இருவிழிகள்
பீளை சாறி ஈழை மேலிட வழ வழென
உமிழுமது கொள கொளென
ஒழுகி விழ வாடி யூனெலாம் நாடி
பேதமாய் மனையவள் – மனம் வேறாய்

வறிது மனையுறு மவர்கள் நணு கு நணு
கெணு மளவில் மாதர் சீயெனா பாலர்
சீயெனா கனவுதனில் இரதமொடு
குதிரை வர நெடிய சுடுகாடு வாவென
வீடு போகென பல தழிய விரகழிய
உரைகுழறி விழிசொருகி வாயுமேலிட
ஆவிபோகு நாள் – மனிதர்கள் பலர் பேச

இறுதியொடு அறுதியென உறவின்
முறை கதறியழ ஏழை மாதராள்
மோதிமேல் விழ எனதுடமை
எனதடிமை எனுமறிவு சிறிதுமற
வாயையாவென ஈமுலோவென விடுகு
பறை திமிலையொடு தவிலறைய ஈமதேசமே
பேய்கள் சூழ்தரார் – எரிதனில் இடும் வாழ்வே

இணையடிகள் பரவுமுதைடியவர்கள்
பெறுமதுவும் ஏசிடார்களோ பர்வநாசனே
இருவினையும் மலமுமற இறவியொடு
பிறவியற ஏகபோகமாய் நீயும்
நானுமாய் இறுகும் வசை பரமசுகம்
அதனையருள் இடைமருகில்
ஏகநாயகா லோகநாயக
இமையவர் பெருமானே.

## திருமந்திரம்

அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திலபாரே.

சிவசிவ வென்கிலர் தீவினையாளர்
சிவசிவ வென்றிடத் தீவினைமாளும்
சிவசிவ வென்றிடத் தேவருமாவர்
சிவசிவ வென்றிடச் சிவகதி தானே.

## இராமலிங்கசுவாமி பாடல்

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறுநினது புகழ்பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேண்டும் உன்னை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளா
தல மோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.



பெற்றதாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சங்கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத் தவருள்ளிருந்தோங்குக
நமச்சிவாயத்தை நான் மறவேனே.

## கந்தர் அலங்காரம்

நாள் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த
கோள் என்செயும் கொடுங் கூற்றென் செயும் குமரேசரிரு
தாளும் சிலம்புஞ் சலங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

## பட்டினத்தார் பாடல்

பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ் தில்லை யம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிரு மனமே அது காண் நன் மருந்துனக்கே.

நானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

### நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த கோயில் திருப்பணியார் விருத்தம்

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொ லாம்புகல் என்னுள்வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல வாஅலர் திங்கள் வைத்த
கண்ணி னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

# வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

### சிவன் விரதங்கள்

(1) கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக்கொண்டு, பின் தொடர்ந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருப்பது.
(2) மார்கழி திருவாதிரை நாளில் மேற்கொண்டு, பின் மாதந்தோறும் வரும் திருவாதிரை நாளில் இருப்பது.
(3) உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது.
(4) மாசி, தேய்பிறை, சதுர்த்தசி (சிவராத்திரி)யில் தொடங்கி ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் மேற்கொள்வது.
(5) கேதாரேஸ்வர விரதம் – புரட்டாதி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசை வரை இருப்பது.
(6) பங்குனி உத்திர நாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது.
(7) தை, சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது.
(8) வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.


### உமை விரதங்கள்

(1) சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருப்பது.
(2) ஐப்பசி உத்திரநாளில் இருப்பது.
(3) புரட்டாதி வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையில் இருப்பது.



சிவமயம்

# சிவயோகர் சுவாமிகள்



நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மக்களுடைய அனுபவ சித்தாந்தம் இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலே என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

*(யோகர் சுவாமிகள் அருளியது)*

உ
சிவமயம்

# சிவயோக சுவாமிகள் பாடல்கள் – நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்.

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணு ம் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன். 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன்.

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்.4

தித்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன். 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7



ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே னெங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன். 9

நமோநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன்.10

# தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு

தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு
உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க் குண்டு
பொய்யும் பொறாமையும் புன்மையோர்க் குண்டு
ஐயன் அடியிணை அன்பர்க் குண்டே. 1

கல்லா தார்பாற் கபட முண்டு
எல்லா ரிடத்து மீச னுண்டு
வில்லா ரிடத்தில் வீத்தொழில் உண்டு
எல்லாச் சக்தியும் இறைபால் உண்டே. 2

தேடுவார் மாட்டுச் செல்வம் உண்டு
தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு
நாடுவார் மாட்டு நன்மை உண்டு
பாடுவார் மாட்டுப் பரமன் உண்டே. 3

சீவன் சிவனெனல் தேறினார்க் குண்டு
ஆவதும் அழிவதும் அசடர்க் குண்டு
ஈவது விலக்கார்க் கெல்லா முண்டு
தேவ தேவன் திருவடி உண்டே. 4

அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு
பொன்புரை மேனி புனிதர்க் குண்டு
தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே. 5



# ஈசனே நல்லூர் வாசனே

*இராகம் - கமாஸ்* *தாளம் - ஆதி*

*பல்லவி*

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா

*சரணங்கள்*

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணு ம் எண்ணமெல்லாம் நண்ணு ம்வண்ணம் வாவா
(ஈசனே)

தாசனான யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா
(ஈசனே)

# திருத்தாண்டகம் III

நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்
ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான் தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள் பெருமா னார்க்கே. 1

கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்த மென்பெல்லா முடம்பிற் றோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்
சிவசிவா சீவன்சிவ னெனக்கண் டேனே. 2

# சிவத்தியானஞ் செய்

சிவத்தியா னத்தைச் செய்யும் மாந்தர்கள்
அவத்தில் பாரினில் அலைவ தில்லையே. 1

தவத்தை யாற்றிடில் தன்னை யறியலாம்
அவத்தை யாற்றிடில் வீழ்வர் நரகினில். 2

தில்லை யம்பலத் தாடுஞ் சேவடி
எல்லை யற்றநல் லின்பம் நல்குமே. 3

உள்ளத் தூய்மையாய் ஒருவன் பாதத்தை
உந்து வார்தமக் குணர்வு வந்திடும். 4

அல்லும் எல்லியும் இறைவன் பாதத்தைச்
சொல்ல வல்லவர் தூய்மை யாவரே. 5

எங்கு மீசனை யேத்துவார் தம்மைப்
பொங்கும் வல்வினை பொருந்த லில்லையே. 6

தெய்வ மொன்றெனத் தெரியும் மாந்தர்கள்
உய்வர் வையத்தில் உண்மை யுண்மையே. 7

எந்த நேரமும் இறைவன் பாதத்தைச்
சிந்தை செய்திடில் தீரும் வல்வினை. 8

அடியவர் பாதத் தன்பு செய்திடில்
கொடிய கூற்றுவன் மடியுந் திண்ணமே. 9

சீலஞ் சேர்சிவ ஞானத் தேனினை
ஞாலத் து ண்பவர் நமனை வெல்லுவார். 10

வாலை வணக்கமாய் மகிழ்ந்த பாவினைக்
காலையும் மாலையும் ஓதக் கவலைபோம். 11



# ஓடிவாடா தொண்டா

ஓடிவாடா தொண்டா ஓடிவாடா
ஒரு பொல்லாப்பு மில்லையென்று ஓடிவாடா 1

தேடிவாடா தொண்டா தேடிவாடா
சிவனடியார் மனங்களிக்கத் தேடிவாடா 2

பாடிவாடா தொண்டா பாடிவாடா
பரமபதி யொன்றென்று பாடிவாடா 3

நாடிவாடா தொண்டா நாடிவாடா
நாங்கள்சிவ மென்றுசொல்லி நாடிவாடா 4

கூடிவாடா தொண்டா கூடிவாடா
குழந்தைக ளோடுசேர்ந்து கூடிவாடா 5

சூடிவாடா தொண்டா சூடிவாடா
தூயநீறு சூடிக்கொண்டு ஓடிவாடா 6

ஆடிவாடா தொண்டா ஆடிவாடா
அஞ்செழுத்தை நாவிற்கொண்டு ஆடிவாடா 7

# சொல்லச் சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்

சொல்லச்சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்
அல்லும் பகலுமற்ற ஆனந்ததந் தருமோனம்
வெல்லவரும் மாந்தர்தம் வாயடக்குஞ் சிவஞானம்
கொல்லவரும் யமனுங் குடியோடிப் போய்விடுவான்
கல்லை யுருக்கிவிடுங் கருணைவெள்ளம் பெருக்கிவிடும்
இல்லையென்னுஞ் சொல்லை யில்லாமல் ஆக்கிவிடும். 1

நல்லூரில் தேரடியில் நாங்கண்ட சிவயோகம்
சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டிவிடும்
வில்லை விடத்தையஞ்சா வீரசாந்தம் ஊட்டிவிடும்
பல்லைக்காட்டித் திரியாமல் பரலோகங் கூட்டிவிடும்
பத்துப்பாட்டுப் பாடிவருங் கேட்டுச் சுவைப்பவரும்
வித்தக ராகவாழ்ந்து விதேகமுத்தி சேர்வாரே. 2

# எல்லாஞ் சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே.

# மங்களம் ஜெய மங்களம் I

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



# மங்களம் ஜெய மங்களம் II

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம் 1

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்குஞ் சிவனார்க்கு மங்களம் 2

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப்பூசை பண்ணு வோர்க்கு மங்களம் 3

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம் 4

நாமறியோ மென்றுசொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற வுத்தமர்க்கு மங்களம் 5

தன்னைத் தன்னாலறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம் 6

மண்ணைப்பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணைநகர் வாழும்வைத் தீசனுக்கு மங்களம் 7

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுக்குஞ் சங்கரற்கும் மங்களம் 8

விண்ணில்விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணிலடங் காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம் 9

நித்தியர்மந் தவறாத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் மங்களம் 10

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

உ
சிவமயம்

# குருநாதன் அருள்வாசகம்

## ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே . ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை. நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே. நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது.

நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்று முள்ளோம்
எங்கு மிருக்கிறோம்
எல்லா மறிவோம்

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

"சந்ததமு மெனது செயல் நினது செயல் யானெனுந் தன்மை நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே"

என்னுந் தாயுமானவர் அருமைத் திருவாக்கே இதற்குப் போதிய சான்று.

---

நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குப் பகவான் நல்லருள் புரிவார்.

எல்லாருக்கும் என் அன்பார்ந்த வணக்கத்தைச் செய்கிறேன்.

இப்படிக்கு - **அவனே தானே**


*"செய்வன திருந்தச்செய்*
*மூத்தோர் வார்த்தை அமிர்தம்"*

---

நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம்.
நாம் அவருடைய தாய்.
நமக்கு மவருக்குமொரு குறைவுமில்லை.
நம்மை அவர் பிரிய முடியாது.
முழுதும் உண்மை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!






செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்



இனிய தம்பதிகள் திரு திருமதி இராசசேகரம் - அரசரத்தின அம்மாள்




திரு இராசசேகரம்தும் 80வது பிறந்த தின விழாவில் தம்பதியர்





செல்விகள் திவாகரி, தயாகரி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்னை, ராணிசீத்தா மண்டபத்தில் நடைபெற்றபோது பேத்திமாருடன் திரு திருமதி இராசசேகரம் - அரசரத்தின அம்மாள் ஆகியோர்



திரு. திருமதி இராசசேகரம் - அரசரத்தின அம்மாள் தம்பதிகள், பிள்ளைகள்,
முதல் பேத்தி செல்வி லோசினியுடன் மற்றும் அமரர்தம் தம்பியார் திரு. த. இரத்தினலிங்கம் தம்முடன்





திரு. திருமதி இராசசேகரம் - அரசரத்தின அம்மாள் தம்பதிகள், திரு. திருமதி வடிவேற்கரசன் தம்பதிகள் பிள்ளைகளுடன்,
திரு. திருமதி ஸ்ரீ பத்மநாபன் தம்பதிகள் பிள்ளைகளுடன், திரு. திருமதி தியாகலிங்கம் தம்பதிகள் பிள்ளைகளுடன்



திரு. திருமதி நடேசன் தம்பதிகள் பிள்ளைகளுடன்,
திரு. திருமதி இராசசேகரம் - அரசரத்தின அம்மாள் தம்பதிகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன்





திரு. திருமதி விவேகானந்தன் தம்பதிகள் மகளுடன்




திருமதி ~~ஞானச்சக்கம்~~, திரு. திருமதி அரவிந்தன் தம்பதிகள், மகள் அஞ்சலி, திரு. திருமதி இராசசேகரம்-அரசரத்தின அம்மாள்






திரு. திருமதி தொண்டமானாபன் தம்பதிகள் பிள்ளைகளுடன்



திரு. திருமதி சிவகுமாரன் குடும்பத்தினர் பிள்ளைகளுடன்



உ
சிவமயம்



# நன்றி நவில்கின்றோம்!

கடந்த 28-04-1998 செவ்வாய்க்கிழமை தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டு இறையடி எய்திய எமது இல்லத்தொளி விளக்காம் **திருமதி இ. அரசரத்தின அம்மாள்தம்** ஈமக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்ளூரிலும், வெளிநாடுகளிலுமிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அந்தியேட்டி, சபிண்டீகரணம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனைத்துக் கிரியைகளையும் நடாத்தி வைத்த வேதியர் பெருமக்களுக்கும், பரமன் புகழ் பாடியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் துணை நின்றவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும், **"இரத்தின மலர்"** எனும் இந்நினைவு மலர்தனை அழகுற அச்சிட்டுத் தந்த கொழும்பு, லக்ஷ்மி அச்சகத்தினருக்கும் எமது உளம் நெகிழ்ந்துள்ள நிலையிலும் நன்றி நவில்கின்றோம்.

இங்ஙனம்
கணவர்: **வீ. இராசசேகரம்**
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

இல. 25, 27வது ஒழுங்கை,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03.
தொலைபேசி: 577910

271, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி: 434800

## ஆண்டி அப்பர் சந்ததியில் இராசசேகரனார்

*அமரர்களைக் குறிக்கிறது

- *மருதகுட்டியார் + *இளையவள்
- *வீரகத்தியார்
- *வயிரவியார்
- *கதிரிப்பிள்ளை + *வள்ளியம்மை
- *அண்ணாமலை + *வள்ளியார்
- ***தெய்வானை** + ***கதிர்காமர் சின்னத்தம்பி**
  - வேலுப்பிள்ளை + வள்ளியம்மை
  - **வீரகத்திப்பிள்ளை** + கதிரிப்பிள்ளை **வள்ளியம்மை**
    - *சுப்பையா + *அன்னப்பிள்ளை
    - *செல்லமுத்து + *மயில்வாகனம்
    - *துரைசாமி + *வள்ளியம்மை, *திரவியம்
    - *முத்தாச்சி + *இளையதம்பி
    - *இராசரத்தினம் + *லெட்சுமிப்பிள்ளை
      - *வண. பிதா தார்சீயஸ் (இரத்தினராசா)
      - *தங்கரத்தினம்
      - *நவமணி
      - **இராஜசேகரம்** + ***அரசரத்தின அம்மாள்**
  - கந்தையா + பொன்னாச்சி
  - மாரிமுத்து + தம்பையா
  - இராமசாமி + ச. மாணிக்கம்
  - பாறுவதி + கதிரிப்பிள்ளை

## அமரர்தம் கொடியிது காண்க!

*அமரர்களைக் குறிக்கிறது

***முத்துச்சாமி + *சிவகாமி அம்பாள்**

- *மாணிக்கம் + *தம்பு
  - ***அரசரத்தின அம்மாள்** + **இராசசேகரம்**
  - இரத்தினலிங்கம் + பத்மாவதி
    - கிருஷ்ணதாஸ் + சத்தியவாணி
      - கிருஷாந்தன்
      - நிஷாந்தன்
      - அகலியா
    - சந்திரதாஸ் + திலகவதி
    - குணசேகரம்
    - ஜெயசேகரம்
  - *இராசலிங்கம்
- *இராசமணி + *துரைசாமி
- *தங்கப்பொன்னு + *துரைசாமி
- *தங்கமணி + *சிவசம்பு

# இராசசேகரனார் வழியில் இனியதோர் குடும்பம்

இராசசேகரம் + *அரசரத்தின அம்மாள்

- வடிவேற்கரசன் + பத்மினிதேவி = திபாகரன், திபாகரி, தயாகரி
- சங்கநிதி + நடேசன் =
  - லோகினி + பாலச்சந்திரன் = சங்கர், விமல், கிருஷ்ணா
  - குமுதினி + அருணேஷ் நேசரட்ணம் = அகிலன்
  - வரதீசன் + மாலினி
- ஸ்ரீபத்மநாபன் + பரிமளா = ஸ்ரீகுமரன், ஸ்ரீபரன், ஸ்ரீபரி
- கனகேஸ்வரி + விவேகானநந்தன் = யோகதுரை, ரேணுகா
- பயோதரி + ஞானசிங்கம் = கல்பனா + அரவிந்தன் = அஞ்சலி
- வத்சலாராணி + சிவகுருநாதன் = வாசன், காஞ்சனா, ராஞ்சனா
- தொண்டமாநாபன் + ரஞ்சினி = திவாகர், ஜெய்கர்
- கேமந்தராணி + தியாகலிங்கம் = ஜெயந்தினி, தர்மினி, விஜயதர்சினி

## கவிஞர் கண்ணதாசன் – அனுபவ மொழிகள்

- மரணம் வெல்ல முடியாதென்பதை அறிந்தும், மனிதர்கள் மரணத்தை எண்ணிக் கலங்குகிறார்களே.
- நெருப்பில் இறங்கிய பிறகு வெயிலுக்குப் பயப்படுவதில் அர்த்தமில்லை.
- உனது ஆற்றல் உண்மையிலே ஆற்றலாக இருக்க வேண்டுமானால், உண்மை உனக்கு உதவவேண்டும்.
- மரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு போகிறேன் போகிறேன் என்றால் போகமுடியாது. மரத்தை விட்டால்தான் போகலாம்.
- சந்நியாசி அளந்து வாழ்கின்றான். சம்சாரி அளவுக்கு மீறி வாழ்கின்றான்.
- "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று சொன்னானே அவனை இப்பொழுது தான் நினைக்கின்றேன். நீங்கள் இப்பொழுதிருந்தே நினையுங்கள். தீய பழக்க வழக்கங்கள், உணவுகள் உடம்பை எவ்வளவு கெடுத்து விடுகின்றன. இதற்கு என் அனுபவங்களே போதும்.
- உடல் இறைவன் கொடுத்த ஒரு இயந்திரம். பிறப்பிலிருந்து பருவத்துக்குப் பருவம் வளர்ந்து வரும் இயந்திரம். நாற்பது வயதுக்குப் பிறகு தேயத் தொடங்குகிறது.
- மனைவி இறந்தால் மறுமணம் செய்யலாம். பிள்ளை மடிந்தால் பெற்றுக்கொள்ளலாம். பெற்றதாய் பிரிந்தால் பிரிந்ததே.
- தன் ஆன்மாவை வருத்திக் கொள்வதன் மூலம், மற்ற ஆன்மாக்களைத் திருத்தியமைக்கும் தர்மகர்த்தா தியாகத்திற்குத் தயாராகுங்கள்.

### தேற்றம்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் – இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். – ஔவைப் பிராட்டியார்

நூல் வடிவம்: கலாநிதி வேலணை வேணியன்

Printed by: Laxmi Printer 195, Wolfendhal Street, Col-13. Tel: 330588, 498545